Prepared by : Ash M.F.M. Niyas
Kg/Mw/Baduriya National School

# பிற சமயங்களை மதித்தல்

**01. சரி , பிழை கூறுக.**

1. மனிதர்கள் யாவரும் சகோதரர்களாவர் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். (   )
2. நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மதீனாவில் முஸ்லிம்கள் மாத்திரமே வாழ்ந்தார்கள். (   )
3. நீதி செலுத்துவது இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானது . (   )
4. நாங்கள் முஸ்லிம்களுடன் மாத்திரமே நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். (   )
5. அரேபியர் அரேபியரல்லாதவரை விட உயர்வானவர்கள். (   )

**02. பொருத்தமான சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக.**

1. இஸ்லாம் பிறசமயத்தவருடன் ..................................... நடந்து கொள்ளுமாறு போதிக்கின்றது.
2. படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் ....................................... .
3. அம்ர் இப்னு ஆஸ்(ரலி) எகிப்தின் ................................. இருந்தார்கள்.
4. நபியவர்கள் ஆட்சி செய்த ..................................... நகரில் யூதர்கள் மற்றும் ஏனைய சமயத்தவர்களும் சம உரிமைபெற்று வாழ்ந்தார்கள்.
5. இஸ்லாத்தில் ....................................... பேணுவதோடு பிற சமூகத்தினரையும் நாம் மதித்து வாழ வேண்டும்.

03. **இணைக்குக.**

| அ | ஆ |
|---|---|
| 1 மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை | கலீபா |
| 2 படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம் | எகிப்திய கவர்னர் |
| 3 உமர் (ரழி) | அல்குர்ஆன் வசனம் |
| 4 அம்ர் இப்னு ஆஸ் (ரழி) | அம்ர் இப்னு ஆஸ் (ரழி) யின் மகன் |
| 5 கிப்திய இளைஞன் | ஹதீஸ் |

04.

1. மனிதர்கள் அனைவரும் சமம் எனக்கூறும் ஒரு குர்ஆன் வசனத்தை எழுதுக.
2. பிறசமயத்தவர்களை மதிக்க வேண்டும் என்ற கருத்தில் உள்ள ஒரு ஹதீஸை எழுதுக.
3. நீதி செலுத்துவதன் சிறப்பைக்கூறும் ஒரு குர்ஆன் வசனத்தை எழுதுக.
4. நபி (ஸல்) அவர்கள் பிற சமயத்தவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள்.
5. கலீபா உமர் (ரழி) ஏன் கவர்னர் அம்ர் இப்னு ஆஸ் (ரழி) யின் மகனைத்தண்டித்தார்.

05.

1. இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்கள் அநுபவிக்க முடியுமான இரண்டு உரிமைகளை எழுதுக.
2. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக உமது நண்பனுக்கு நீர் கூறும் ஆலோசனைகள் இரண்டு எழுதுக.
3. உமது ஊரில் உள்ள பிற மதத்தவருடன் நீர் நடந்து கொள்ள வேண்டிய இஸ்லாம் கூறும் வழிமுறைகள் மூன்றை எழுதுக.
4. உங்கள் நண்பன் முஸ்லிம் அல்லாத ஒரு சகோதரருக்கு தீங்கு விளைவித்தால் நீர் எவ்வாறு உமது நண்பனுக்கு புத்திமதி கூறுவீர்.